1967 நவம்பர் 24]

நகை அடகு பிடிப்பவர்கள்

*** 427 வினா—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய சட்ட, கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகம் பூராவும் எத்தனை நகை அடகு (Pawn Brokers பிடிப்பவர்கள் இருக்கிறார்கள்?

(இ) ஒரு மாதத்திற்கு ரூபாய் நூற்றுக்கு ஒரு ரூபாய் வட்டி என்று அடகு சீட்டில் அச்சடித்து விட்டு நூற்றுக்கு இரண்டு ரூபாய் வட்டி வசூலிப்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

(உ) ஆம் எனில், இந்தத் தவறான நடத்தையைத் தடுக்க சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 5,346.

(இ) தெரியாது.

(உ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, தெரியாது என்ற பதிலைக் கொஞ்சம் கவனித்துத் தெரிந்துகொள்வதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்வதற்கு அரசு முன்வருமா ? பெரும் பகுதி கிராமங்களிலும், மற்ற இடங்களிலும் இம்மாதிரி வசூலிக்கப் படுவதால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதன் காரணமாக, உடனடியாக அரசு ஆவன செய்யுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விக்குப் பதில் சொல்லாமல் இருக்க அமைச்சர்களுக்கு உரிமை உண்டு.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வி, கூடுதலாக, சட்டத்திற்குப் புறம்பாக வட்டி வசூலிக்கப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா, அரசாங்கத்திற்குத் தெரிந்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது. இதுவரையில் எங்களுக்குத் தெரியாது. அதற்குரிய சட்டத்தில் 15-வது பிரிவு இருக்கிறது. ரூ. 500 அபராதம் போடப்படும் என்று இருக்கிறது. தவறுதலாக எங்கு நடக்கிறது என்று அங்கத்தினர் அவர்கள் தெரிவித்தால், நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

Merger of Medical and Public Health Departments

* 428 Q.—THIRU K. VINAYAKAM :
THIRU S. DORAISAMY : } Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is a move with the Government for the merger of Medical Department with Health Department; and

(b) if so, the advantages of such a merger?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.